# In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.

அ.வ.எண். 116/2019 தேதி-17.06.2025

(P.W.1) – தங்கமணி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனது வீட்டில் மின் இணைப்பு உள்ளது. அந்த மின்இணைப்பு எனது சொத்திலிருந்து கிழக்கிலுள்ள ரோட்டிலிருந்து வருகிறது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வரும் பாதை வழியாக வந்து எனது வீட்டின் தெற்காக மேற்படி மின்இணைப்பு எனக்கு வருகிறது. மின்இணைப்பு கம்பம் என் சொத்தின் தென்கிழக்கு மூலையில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது சொத்தின் கிழக்கு பாகம் காங்கிரீட் போடும்போது மின்கம்பத்தை வெளியேவிட்டு காங்கிரீட் காம்போண்ட் போட்டேன் என்றால் சரிதான்.

காங்கிரீட் காம்போண்ட்டின் கிழக்கில் உள்ள சொத்திலிருந்து மண் வராமல் தடுப்பு சுவராக உள்ளது என்றால் சரிதான். அந்த தடுப்பு சுவர் எனது சொத்திலிருந்து 2 அடி உயர்ந்துள்ளது என்றால் சரிதான். எனது சொத்தின் வடக்கு சொத்து வர்க்கீஸ்சுக்கு உரிமைப்பட்டது. வர்க்கீஸ்க்கு சொத்தின் மேற்கு பக்கம் ராமகிருஷ்ணன் சொத்து உள்ளது. அதை தற்போது விலைக்கு கொடுத்துவிட்டார். அந்த சொத்தில் வீடு வைத்திருப்பது புஷ்பராஜ் என்பவர்.

புஷ்பராஜ் சொத்திற்கும் வர்க்கீஸ் சொத்திற்கும் இடையில் காம்போண்டு உள்ளது. மேற்படி புஷ்பராஜ் மற்றும் வர்க்கீஸ் சொத்திற்கு மேற்கிலிருந்து கிழக்காக வழிப்பாதை உள்ளதா என்றால் உள்ளது. எனது சொத்திற்கும் வர்க்கீஸ் சொத்திற்கும் கிழக்கு பக்கம் வழிப்பாதை இருக்கிறதா என்றால் இருக்கிறது.

எனது வீட்டிற்கும் வர்க்கீஸ் சொத்திற்கும் கிழக்கு பகுதியாக இருக்கும் வழிப்பாதையைத்தான் நாங்கள் உபயோகித்து வருகிறோம் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் வரைபடத்தில் குறிப்பிட்டிருக்கும் ராஜையன் என்பவரின் சொத்திற்கும் மேற்படி வழிப்பாதை செல்கிறது என்றால் சரியல்ல.

எனது சொத்தும் அதன் கிழக்கே உள்ள சொத்தும் ரோடு வரை ஒரே நபருக்குரியது என்றால் சரிதான். ஒருவருடைய சொத்தை இருவர் வாங்கியுள்ளார்கள். அதில் ஒருவர் பெயர் சுரேஷ் மற்றொருவர் பெயர் எனக்குத் தெரியாது.

நான் வாங்கிய சொத்து கிழக்கு பக்கம் உரிமையுள்ள நபரிடமிருந்து

வாங்கியதால் நான் மேற்கு பக்கம் பாதை உரிமை கேட்கமுடியாது என்றால் சரியல்ல. எனது சொத்தின் மேற்கு பக்கமுள்ள சொத்தில் ரப்பர் மரங்கள் உள்ளது என்றால் சரிதான். எனது மேற்கு பகுதியிலுள்ள சொத்திற்குமிடையில் முள்கம்பிகள் இருந்தது என்றால் அப்படி எதுவும் இல்லை.

மேற்படி முள்கம்பிகள் யோகிப்புயலில் மரங்கள் சாய்ந்து சேதமானது என்று சொன்னால் சரியல்ல. ராமகிருஷ்ணன் சொத்திலிருக்கும் மரங்கள் 30 வருட மரங்கள் தற்போதும் உள்ளது. ராமகிருஷ்ணனின் சொத்திற்கு வடக்கு பக்கமும் தெற்கு பக்கமும் வழிப்பாதை உள்ளது என்று சொன்னால் சரிதான். அவர்கள் வழிப்பாதைக்கு வாங்கிய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும்.

பஞ்சாயத்தில் எனது வீடுவைப்பதற்கு வேண்டிய வரைபடத்தை தாக்கல் செய்ய முடியும் என்று கூறியதை தற்போது எடுத்து வந்துள்ளேனா என்றால் இல்லை. பஞ்சாயத்தில் வரைபடம் கொடுக்கும் போது வழிப்பாதையை காட்டிதான் அனுமதி பெறமுடியும் என்று சொன்னால் சரிதான். அதில் எனது சொத்திற்கு கிழக்குப்பகுதியை வழிப்பாதையாக காண்பித்திருப்பதால்தான் அந்த வரைபடத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பஞ்சாயத்தில் அனுமதி பெற்ற வரைபடத்தை எனக்கும் ஒருநகல் தருவார்கள் என்று சொன்னால் சரிதான். அது தற்போது என்னிடம் இல்லை.

எனது சொத்தின் கிழக்கு பகுதியிலிருந்த வழிப்பாதையை அடைத்துவிட்டு மேற்கு பக்கமாக வழிப்பாதை கேட்கிறேன் என்றால் சரியல்ல.

நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் சரியா, தவறா என்பதுபற்றி எனக்கு தெரியாது. எனது சொத்தின் மேற்கு பகுதியில் இருக்கும் முள்கம்பி யோகிப்புயலில் சேதமடைந்ததை உபயோகித்து அங்கு ஒரு வழித்தடம் ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. எனது சொத்திற்கும் வர்க்கீஸ் சொத்திற்கும் எனது சொத்தின் தெற்கு பகுதியில் உள்ள சுரேஷ் சொத்திற்கும் மேற்கு பக்கம் முள்கம்பி இருந்தது என்று சொன்னால் சரியல்ல. தற்போதும் நான் இல்லாமல் ஆக்கிய பகுதியை தவிர மற்ற இடத்தில் முள்கம்பி வேலி இருக்கிறது என்று சொன்னால் சரியல்ல.

சுரேஷ் சொத்திற்கு மேற்கு பகுதி காம்போண்ட் சுவர் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வர்க்கீஸ் சொத்திற்கு மேற்கு பகுதியிலும் காம்போண்ட் சுவர் உள்ளது. நான் பிரதிவாதியின் சொத்து வழியாக வழியை எப்போதும்

உபயோகிக்கவில்லை என்று சொன்னாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. சாணலின் கிழக்கு பக்க ரோட்டை எப்போது அகலப்படுத்தினார்கள் என்றால் அகலப்படுத்தவில்லை. இந்த வழக்கிற்காக நான் இதை பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு வழக்கு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டுமென்று சொன்னால் சரியல்ல.